**தலைப்பு 182 – வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 182 – வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலன்புரி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 04 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

---

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

---

#### மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

---

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,145.54 மில்லியனாக இருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 963.31 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சின் தேறிய நிதி ஏற்பாட்டில் சேமிப்புக்கள் ரூபா 182.23 மில்லியன் அதாவது, தேறிய நிதியேற்பாட்டின் 15.91 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக, சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 612.49 | 538.25 | 74.24 | 12.12 |
| மூலதனம் | 533.05 | 425.06 | 107.99 | 20.26 |
| மொத்தம் | 1,145.54 | 963.31 | 182.23 | 15.91 |

### 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 18201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 25.61 | 23.75 | 7.00 | 10.57 | 60.00 | 23.50 |

### 2.3 கட்டுநிதிக் கணக்கு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கட்டுநிதிக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,925 ஆகும்.

### 2.4 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 18,375 ஆக இருந்தது.

### 2.5 கணக்காய்வு அவதானிப்பு

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட

அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.1.1 பாதீட்டு முரண்கள்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 06 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 4.04 மில்லியன் தொகையான மொத்தத் தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 09 செலவின விடயங்களுக்காக மிகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 50 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சளவைக் கொண்டிருந்தது.

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

18201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 585,808 ஆக இருந்தது. 01 வருடம் முதல் 02 வருடங்கள் வரையிலான காலமாக முன் கொண்டு வரப்படுகின்ற ரூபா 416,240 கூட்டுத்தொகையான 06 கடன் மீதிகளும், 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன் கொண்டு வரப்படுகின்ற ரூபா 57,140 தொகை கடன் மீதிகளையும் அறவிடுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3 சொத்துக்களின் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற சொத்துக்கள்

2012 ஒக்தோபர் 05 ஆந் திகதிய விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் கடிதத்தின் மூலம் ரூபா 2,800,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்ட அமைச்சிற்குரிய வாகனமொன்றை விற்றுத்தீர்ப்பதற்கு 2012 நவம்பர் 20 ஆந் திகதிய கடிதம் மூலம் அரச நிதித் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2015 ஒக்தோபர் 29 ஆந் திகதி அவ்வாகனம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அவ்வாகனத்தை ரூபா 1,274,900 இற்கு கொள்வனவு செய்த கொள்வனவாளருக்கு கொள்வனவு செய்த சந்தர்ப்பத்தின் போது வாகனத்தின் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு அமைச்சின் உத்தியோகத்தர்கள் தவறியமையினால் பெறப்பட்ட பணம் மீண்டும் அக்கொள்வனவாளருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 2,800,000 இற்கு மதிப்பிடப்பட்ட மேற்கூறப்பட்ட வாகனம், கைதவிர்ப்பு நடவடிக்கைகள் துரிதமாகக் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதி

வரையில் ரூபா 400,000 வரை மதிப்பீட்டுப் பெறுமதி குறைக்கப்பட்டிருந்தது. 2015 யூன் மாதம் வரையில் மேற்கூறப்பட்ட வாகனம் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் அமைச்சினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வின் போது டெல் மடி கணனியொன்றின் பற்றாக்குறை தொடர்பாகவும், அமைச்சிற்குரிய வாகனமொன்று விபத்திற்குட்பட்டமையினால் கிடைக்கப் பெற்ற ரூபா 86,748 தொகையான காப்புறுதி இழப்பீடு தொடர்பாகவும் நிதிப்பிரமாணம் 103, 104, 107, 109 மற்றும் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 10 | 10 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,214 | 1,045 | 169 |
| (iv) | ஆரம்ப நிலை | 29 | 23 | 06 |
| | மொத்தம் | 1,255 | 1,079 | 176 |